ஊடக அறிவித்தல் இல. 05

# தேர்தல் ஆணைக்குழு

2021.01.29 ஆந் தேதி கூடிய தேர்தல் ஆணைக்குழு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவருவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்கு பின்வரும் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளதென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது:

- பிரசைகளின் வாக்குரிமையை நேரடியாகவே ஓர் அடிப்படை உரிமையாக அரசியலமைப்பில் உட்சேர்த்தல்.

- அரசியலமைப்பில் ஏற்கனவே சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மக்கள் தீர்ப்பு என்பன மாத்திரமே தேர்தல்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையால், அதற்கு மேலதிகமாக மாகாண சபைத் தேர்தல், உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் ஆகியவற்றையும் அரசியலமைப்பில் உட்சேர்த்தல்.

- தேர்தலொன்றுக்காக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்த தேர்தலுக்கு அவரினால் மேற்கொள்ளப்பட்ட உண்மையான செலவும் வருமான மூலங்களும் அடங்கிய வெளிப்படுத்தலொன்றை தேர்தலொன்று முடிவடைந்து முடிவுகள் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதை கட்டாயமாக்குதலும் அதனைப் பகிரங்கப்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிப்பதும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் செலவின அறிக்கையை உரிய காலத்துள் வழுங்காமை அல்லது பிழையான விடயங்களை உள்ளடக்கியிருத்தல் அல்லது வழுக்களுடன்கூடியதாக இருத்தல் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை/ உறுப்பினர் பதவியை இல்லாதொழிப்பதற்கும் தோல்வியடைந்த வேட்பாளரொருவரெனில், அச்செயலை தேர்தல் தவறொன்றாகக் கருதி செயலாற்றுவதற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரத்தை வழங்குதல்.

- பாராளுமன்றத்திற்கு தெரிந்தனுப்பப்பட்ட உறுப்பினரொருவர் தனது பதவிக் காலத்துள் முதல் 02 ஆண்டு காலப்பகுதியில் யாதேனும் நோய் நிலைமை அல்லது வேறு சிறப்பான நியாயமான காரணமொன்றின்றி அக்காலப்பகுதியில் நடாத்தப்பட்ட மொத்த பாராளுமன்ற சபை அமர்வு நாட்களில் ஆகக்குறைந்தது 1/3 இற்கேனும் வருகைதராதிருக்கும் பட்சத்தில் அப்பாராளுமன்ற உறுப்பினரின் பதவியை இல்லாதொழித்தல்.

- மக்கள் தீர்ப்பொன்றின்போது குறித்துரைக்கப்பட்டதொரு விடயம் பற்றிய மக்களின் கருத்தறிதல் மாத்திரமே தற்போது காணப்படுவதன் காரணமாக யாதேனுமொரு சட்டத்தின், யாதேனும் குறித்துரைக்கப்பட்ட சில பணிகள் தொடர்பான ஒரு பணிப்பு அல்லது சில கட்டளைகளுக்கு மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அது தொடர்பான சட்டத்தின் பிரிவுகளில் திருத்தம் கொண்டுவருதல்.

- பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினரொருவரினால் மேற்கொள்ளப்பட்ட யாதேனுமொரு தவறு தொடர்பில் நீதிமன்றமொன்றின் மூலம் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின் அப்பாராளுமன்ற உறுப்பினர் அல்லது உறுப்பினர் அப்பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அல்லது உறுப்பினர் பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவரொருவராவாரெனில், அது குறித்து விசாரணைசெய்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து குறித்த நபரை விலக்குவதற்கான அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குதல்.

- யாதேனுமோர் அரசியல் கட்சியினால் பாராளுமன்றத் தேர்தலுக்கு சமர்ப்பிக்கப்படும் பெயர்குறித்த நியமனத்துடன் தேசியப் பட்டியலுக்கும் பெயர்குறித்த நியமனமொன்றை வழங்க வேண்டுமென்றும், அத்தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தேர்தல் நடைபெற்று 07 நாட்களுக்குள் பெயர்குறிக்கப்படாதிருக்கும் பட்சத்தில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தேசியப் பட்டியல் பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முந்துரிமைப்படி பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குதல்.

- அரசியலமைப்பினூடாகவே இளம் மற்றும் பெண் பிரதிநிதித்துவத்தின் குறித்ததொரு சதவீதம் பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி வேட்பாளர் பெயர்குறித்த நியமனத்திற்கு உட்சேர்ப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2021.0129